யமஹாஏஜென்சி
உங்களுக்குத் தேவையான சகலவிதமான யமஹா உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும், இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும், கிறீஸ், பிற்றிங் செய்து கொள்வதற்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்.
ஜோசப் மோட்டர் வேக்ஸ்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை — அஞ்சாமை — நடு நிலைமை

விலை ரூ. 1-50

YAMAHA AGENCY
யமஹா அவுட்போட் மோட்டர் மீண்டும் 10-8-87 முதல் பருத்தித்துறை பிரதான வீதியில் இயங்கத்தொடங்கியுள்ளது.
ஜோசப் மோட்டர் வேக்ஸ்
யமஹா ஏஜென்சி
பிரதான வீதி,
பருத்தித்துறை.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆவணி மீ 12 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 02 (28 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 235

சுபநேரம்
28-8-1987
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
6.05 முதல் 7.35 வரை
ராகுகாலம்:-
10 35 முதல்-12.05வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
விநாயக சதுர்த்திவிரதம்

சமாதான ஒப்பந்தம் காற்றில்!

# இந்திய இராணுவ ரோந்தை நிறுத்தி ஸ்ரீலங்கா பொலிஸார் சேவையில்

## திருமலை தமிழர் பதற்றம்

— திருமலை மாவட்டச் செய்தியாளர்—

திருகோணமலை, ஆகஸ்ட் 28

திருகோணமலை நகரில் இந்திய இராணுவம் ரோந்து செல்வது நிறுத்தப்பட்டு விட்டது. அதற்குப் பதில் ஸ்ரீலங்கா பொலிஸாரே இப்போது ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மடத்தடிச் சந்தியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலைத் தடுப்பதற்கு இந்திய அமைதிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் அல்லவா? அதன் பிரதிபலனாகவே இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக மிக நம்பிக்கையாக அறிய வந்துள்ளது.

இந்த மாற்றத்தைத் தொடர்ந்து தமக்குப் பாதுகாப்பு இல்லையே என்ற பதற்றத்துடன் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்க இணங்கிய இந்திய இராணுவத்தை அமைதியை நிலைநாட்ட விடாது தடுப்பது இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை காற்றில் பறக்க விடுவது போன்ற செயலாகும் என அரசியல் அவதானிகள் கருத் (6ஆம் பக்கம் பார்க்க)

## லலித்துக்கு மற்றொரு ஆபரேஷன்

கொழும்பு, ஆக. 28

இன்னும் சில தினங்களில் அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்கு இன்னொரு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

'அது சிறிய சத்திர சிகிச்சையே'—இப்படி அவரின் குடும்ப உறுப்பினர் தெரிவித்தார்.

இதனிடையில் பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா, அமைச்சரை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரிக்குச்சென்று பார்வையிட்டார். (உ-எ)

## திருமலை மினி முகாம்கள் அகற்றப்படும்

### கூட்டணியினரிடம் வாக்குறுதி

திருகோணமலை, ஆக.28

திருகோணமலையில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ மினி முகாம்கள் விரைவில் மூடப்படும்.

இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. எச். எஸ். பூரி தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களிடம் மேற்கண்டவாறு உறுதி அளித்தார்.

பொதுசனத்தொடர்பு நிலையத்தில் வைத்து இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

சட்டத்தரணி ஆர். விக்கினேஸ்வரன், திரு. கே. மாணிக்கசபாபதி, திரு. என். சண்முகசிகாமணி ஆகியோர் கூட்டணி சார்பில் இதில் கலந்துகொண்டனர்.

பின்னர் திரு. பூரியும் மற்றும் அதிகாரிகளும் இணைப்பதிகாரியான கேர்ணல் செனிவிரத்தினவைச் சந்தித்து உரையாடினர்.

திரு. பூரி கடந்த புதன்கிழமை திருகோணமலைக்கு திடீர் விஜயஞ் செய்தார்,

திருமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற உண்ணாவிரதத்தையும் திரு. பூரி பார்வையிட்டார்.

தடுப்பு முகாமில் உள்ளவர்கள் விடுதலை செய் (6ஆம் பக்கம் பார்க்க)

## ஞாயிறு மின்வெட்டு இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 28

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மட்டும் மின்சார வெட்டு அமுலில் இருக்காது.

நீர்த்தேக்க பகுதிகளில் சற்று மழை பெய்ததன் காரணமாக மின்வெட்டு ஞாயிற்றுக்கிழமை மட்டும் தளர்த்தப்பட்டு இருக்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-10)

## தகவலுக்கு ரூ. 10 லட்சம்

கொழும்பு, ஆக. 28

நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம் பெற்ற கிரனேட் தாக்குதல் குறித்து தகவல் கொடுப்பவருக்கு பத்துலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று பொலீஸ் திணைக்களம் அறிவித்து உள்ளது.

இதனிடையில் நாடாளுமன்ற சிற்றூழியரான சுணேமுல்லையைச் சேர்ந்த அஜித் குமாரா தனது குடும்பத்துடன் தலைமறைவாகி விட்டதாக அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## ஜயேந்திர சரஸ்வதி தலைக்காவிரியில் தவம்!

சென்னை, ஆக. 28

காஞ்சி மடத்தை விட்டு வெளியேறிய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வமிகள் கர்நாடக மாநிலத்தில் தலைக்காவிரியில் அமைந்துள்ள கைலாச ஆசிரமத்தில் தங்கியிருக்கின்றார்.

குடகு மாவட்டத்தில் காவிரி, நீரூற்றாக உற்பத்தியாகும் பகுதி தலைக்காவிரி. அங்கு அகஸ்தியர் கோயில் ஒன்று உண்டு.

இங்கு தான் தியானத்தில் இருக்கப் போவதாக ஸ்வாமிகள் தெரிவித்தார்.

கடந்த திங்கள் தலைக்காவிரி போய்ச் சேர்ந்தார் ஸ்வாமிகள்.

அதற்கு முன்னர் 20 மணித்தியாலங்களாக ஸ்வாமிகள் தியானத்தில் இருந்தார்.

மடத்தை விட்டு வெளி (6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார்ப் பகுதியில் 3 புலிகள் கொலை

### புளொட்மீது குற்றச்சாட்டு!

யாழ்ப்பாணம், ஆக. 28

மன்னார், நானாட்டான் பகுதியில் கடந்த புதன் கிழமை மூன்று விடுதலைப் புலிகளை புளொட் இயக்கத்தினர் படுகொலை செய்துள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தகவல் தருகையில்கூறியதாவது:

26ஆம் திகதி நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் பிரஸ்தாப விடுதலைப் புலி உறுப்பினர்கள் மூவரும் தமது வீட்டுக்குச் சென்றுவிட்டு நிராயுதபாணிகளாக திரும்பிக் கொண்டிருக்கையில் இவர்கள் மீது புளொட் இயக்கத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இவர்களைப் படுகொலை செய்தனர்.

இத்தவேளை மன்னார்ப் பகுதியில் பல கடைகளும் கொள்ளையடிக்கப் (6ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் மீண்டும் பொலீஸ் ரோந்து

கல்முனை, ஆக 28

கல்முனையில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் பொலீஸார் வீதிகளில் நின்று மோட்டார் சைக்கிள், கார் ஆகியவற்றில் செல்வோரை நிறுத்தி வாகன லைசென்ஸ், செலுத்தும் லைசென்ஸ், காப்புறுதிப் பத்திரம் ஆகியவற்றைக் கேட்டுச் சோதனையிடுகின்றனர்.

ஹெல்மட் அணியாமல் மோட்டார் சைக்கிளில் செல்வோரையும் பிடித்துத் தண்டிக்கின்றனர். (இ-84)

## இந்திய ராணுவத்துக்கு எதிராக கோசம்

கல்முனை, ஆக. 28

அம்பாறையில் இந்திய இராணுவத்தினர் முகாமிடச் சென்ற போது அங்கு கூடிய சிங்களவர்கள் சிலர் ''இந்திய இராணுவமே வெளியேறு'' என்று கோஷமிட்டு ஆரவாரம் செய்தனர்.

இந்திய இராணுவத்தினர் கம்புகளை வெட்டி இவர்களைத் துரத்தியடித்ததாகக் கூறப்படுகிறது.




ஸ்ரீ லங்கா இராணுவம் யாழ்ப்பாணம் மீதுபடை எடுத்தது நிற்க, இப்ப தென்னிலங்கை, வெளிநாடு எண்டு பல இடங்களிலை இருந்தெல்லே எல்லோரும் படை எடுக்கினம்!

## அமெரிக்கதூதர் வருகை

யாழ்ப்பாணம், ஆக. 28

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜேம்ஸ் டபிள்யூ ஸ்பெயின் இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

வடபகுதியில் சேதமடைந்த பகுதிகளை அவர் பார்வையிடுவார்.

அவர் 2ஆம் திகதி கொழும்பு திரும்புவர். (உ-7)

## பிரிட்டிஷ் தூதுவர் இன்று யாழ் வருகை

யாழ்ப்பாணம், ஆக. 28

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் இன்று (6ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை பிரசைகள்குழு செயலாளர் வீடு மீது கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், ஆக. 28

திருமலை பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி திருமதி சுபாஷினி வரதனின் வீட்டின்மீது நேற்றுப் பகல் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அப்பகுதியில் துப்பாக்கிவேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

இதனால் வீடு சேதமடைந்தது. எனினும் எவரும் காயமடையவில்லை.

கிறீன் வீதியில் உள்ள இவரது வீட்டுக்குச் சென்ற இருவர் கைக்குண்டுகளை வீசியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

இதேவேளை அநுராதபுரச்சந்தி, கிறிமாபுரம் ஆகிய இடங்களில் நேற்றுச் சில தமிழர்கள் தாக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இது தொடர்பாக இந்திய அமைதிப்படையினரிடம் முறையிடப்பட்டுள்ளது [உ-10]

## ஆயுதங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 28

யாழ் கோட்டை முகாமில் நேற்று விடுதலைப் புலிகள் தரைக் கண்ணி வெடிகளையும் கைக்குண்டுகளையும் ஒப்படைத்தனர்.

-இவ்வாறு இந்திய அமைதிப்படையின்உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று மாலை நான்கு மணி அளவில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் ஜஸ்ரின் ஸ்ரீ லங்கா இராணுவ உயரதிகாரி மேஜர் (6 ஆம் பக்கம் பார்க்க)

## அநாதரவாகக் கிடந்த ஷெல் வெடித்தது! 3 சகோதரர்கள் பலி!

### கட்டுவனில் சம்பவம்

டலாவி, ஆக. 28

வெடிக்காத நிலையில் கிடந்த ஷெல் ஒன்றை தூக்கி வீசியபோது அது வெடித்ததினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர்அந்தஇடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்தனர்.

உயிரிழந்தவரின் 11 மாதம் நிரம்பிய குழந்தையும் அடங்குகின்றது

இச்சம்பவம் நேற்றுக் கட்டுவன் கிழக்கு கிராமத்தில் நடந்தது.

சின்னப்பொடி, மனோகரன் (18வயது). சின்னப்பொடி நாகேஸ்வரி (வயது13), சின்னப்பொடி ராஜ்கரன் (11 மாதம்) என்பவர்களே இறந்தவர்களாவர்.

சின்னப்பொடி விஸ்வரத்தினம் (17வயது), நவரத்தினம் மதியழகன் (12வயது) என்பவர்களே படுகாயமடைந்து தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் சின்னப்பொடி விஸ்வரத்தினம் யாழ் அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

கட்டுவனில் இராணுவ நடவடிக்கைகளின் போதுஏவப்பட்டுவெடிக்காமல் கிடந்த ஷெல் குண்டு ஒன்றை இவர் (6ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. என். டி. எல். எவ். உண்மையான குழு எது?

யாழ்ப்பாணம்,அக் 28

உண்மையான ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ. என். டி. எல். எவ்.) எது?

தங்களுடையதே உண்மையான ஈ. என். டி எல். எவ். என இரு குழுவினர் உரிமைகோரி வருகின்றனர்.

புளொட் இயக்கத்திலிருந்து அதிருப்தியடைந்த உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டது ஈ. என். என். டி. எல்,எவ். என்று தெரிவித்து—

பிரசாரச் செயலாளர் மனோ மாஸ்டர் என்ற பெயரில் பல அறிக்கைகள் அண்மைக் காலத்தில் வெளியாகி வந்தன.

ராஜன் குழுவினரே இவர்கள்.

இதேவேளை ஈ. என். டி. எல். எவ். என்பது தமது இயக்கமே என்று மற்றொரு பிரிவினரும் உரிமைகோரி இருக்கின்றனர்,

ஈ. என். டி. எல். எவ். என்ற பெயரில் சென்னையிலிருந்து அறிக்கை ஒன்று வெளியாகியிருக்கின்றது.

இந்த அறிக்கையில் [6 ஆம் பக்கம் பார்க்க]

## துரோக சக்திகளை இனங்காணுமாறு புலிகள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஆக 28

தமிழீழப் பகுதிகளில் தற்பொழுது உருவாகி வரும் துரோக சக்திகளை தமிழீழ மக்கள் இனம் கண்டுகொள்ளவேண்டும்

இவ்வாறு விடுதலைப் புலிகள் அரசியற்பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபன் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்று வரை 631 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

உலகளாவிய ரீதியில் அதி உச்சத் தாக்குதல் முறையாகிய தற்கொலைப்படை ரீதியான தாக் (6 ஆம் பக்கம் பார்க்க]

## அதிகாரங்கள் பற்றி பேச்சு செப் 15க்கு முன்

### இந்திய அரசு காலக்கெடு

புதுடில்லி, ஆக. 28

மாகாண சபைக்கு வழங்கப்படவுள்ள அதிகாரங்கள் பற்றிய அரசு மட்டப் பேச்சுக்கள் யாவும் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்குள் முடிவடைந்துவிடவேண்டும் என்று காலவரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் [6 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ( சின்னஞ் சிறு விளம்பரம் )

### விற்பனைக்கு

நாலடியார், பரிபாடல், புறநானூறு, சிலப்பதிகாரம், நளவெண்பா, சிவகசிந்தாமணி குண்டலகேசி, சிறுப்புராணம், திருக்குற்றாலக்குறவஞ்சி ஆகிய புதிய நூல்கள் விற்பனையாகின்றன. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.

ஹொண்டா மோட்டார் சைக்கிள் CB 125 மிக நல்ல நிலையில் உள்ளது. நேரில் வரவும். ''மலரகம்'' ஏழாலை வடக்கு, ஏழாலை.

(1575)

### சேவை

இரண்டு நாட்களில் கலர் சுருள்கள் படமாக்கித் தரலாம். வீடியோவில் படங்கள் பிடித்துக் கொள்ளவும், படங்களுக்கு பிறேம் செய்யவும், கறுப்பு, வெள்ளை கலரில் படங்கள் எடுக்கவும் ஸ்ருடியோ நித்ய சித்ரா, சங்கானை (1506)

### தேவை

அச்சகத்தில் பங்காளராகவும், முழுநேர ஊழியராகவும், பணிபுரிய ஆண் / பெண் இருபாலாரும் தேவை. முழுமையான விபரங்களுடன், 5-9-87க்குள் நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கவும். ''மலரகம்'' ஏழாலை வடக்கு, ஏழாலை.

(1575)

### திருமண சேவை

பொறியியலாளர்கள், வைத்திய கலாநிதிகள், கணக்காளர்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், தனியார் துறை ஊழியர்கள், தாரமிழந்தவர்கள், விதவைகள், வெளிநாடுகளில் நிரந்தர வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் ஆகிய தரத்திலுள்ள ஆண், பெண் மணமக்கள் எம்மிடம் இருக்கிறார்கள். விண்ணப்பிக்கவும். விளம்பர எண்: 65, மே/பா. உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(1578)

போலியோ நோய் வேகமாகப் பரவுகிறது:

# யாழ் ஆஸ்பத்திரியில் மட்டும் 45 குழந்தைகள் அனுமதி

## அதிகாரிகள் சென்று நிலைமையை நேரில் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஆக. 28

அண்மையில் பரவத் தொடங்கிய இளம்பிள்ளைவாத (போலியோ) நோயால் இதுவரை 45 குழந்தைகள் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் இந்நோய் பரவி வருவதையிட்டு சுகாதாரப் பகுதியினர் இதனைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இந்நோய் வேகமாகப் பரவி வருவதையும் அதனை மேலும் பரவாமல் தடுக்கும் நோக்கத்துடனும் வைத்திய கலாநிதி இ. இராஜநாதன், வைத்திய கலாநிதி ரன்சன் சில்வா ஆகியோர் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ் வைத்தியசாலைக்குச் சென்று நோயுற்ற குழந்தைகளைப் பார்த்தனர். நோய் பரவிய இடங்களையும் பார்வையிட்டனர்.

வைத்திய கலாநிதி சா. விஜயராசாவுடனும் மற்றும் சுகாதார அதிகாரிகளோடும் போலியோ பரவுவதைத் தடுப்பது பற்றி அவர்கள் ஆலோசனை நடத்தி உரிய பணிப்புரைகள் வழங்கினார்கள்.

இதுவரையில் கிளிநொச்சி-9, மானிப்பாய்-5, காங்கேசன்துறை-1, கோப்பாய்-1, யாழ் மாநகரசபை எல்லைப்பகுதி-28, மன்னார்-1 ஆக மொத்தம் 45 குழந்தைகள் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் மாநகர சபை எல்லைக்குள் குருநகர் பகுதியில் அநேக குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குருநகர்ப் பகுதியில் சுமார் 6000 குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது

பிறந்த ஒரு வருடகால எல்லைக்குள் மூன்று தடவையும் ஒன்றரை வயதில் 4 ஆவது தடவையும் போலியோ மருந்து ஒழுங்காகக் கொடுபடாத குழந்தைகளே இந்த நோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபையில் போதிய சுகாதார ஊழியர் இல்லாததாலும் அண்மையில் இப்பகுதியில் நடந்த வன்செயல்களால் மக்கள் அடிக்கடி இடம் பெயர்ந்ததாலும் குழந்தைகளுக்கு உரிய நேரத்தில், தேவையான அளவு போலியோ தடுப்பு மருந்து கொடுபடவில்லை எனக் கூறப்படுகிறது (இ-18)

## சிரமதானத்துடன் பாடசாலை ஆரம்பம்

கொடிகாமம், ஆக. 28

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் சிரமதானப் பணியுடன் மூன்றும் தவணையை ஆரம்பித்தது.

ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் சுமார் இரண்டு மாதங்கள் இங்கு தங்கியிருந்தமையால் பாடசாலையும் சூழலும் அசுத்தப்படுத்தப்பட்டு இருந்தன.

இதனால் மாணவர்கள் பாதிக்கப்படாமலிருக்க ஆசிரியர்களும் மாணவர்களும், தொண்டர்களுமாகப் பாடசாலைக் கட்டடம், தளபாடங்கள், சுற்றுப்புறங்கள் அனைத்தையும் துப்புரவு செய்தனர். (ஒ-75)

உ
கணபதி துணை

### விவாக சுபமுகூர்த்தம்

அன்புடையீர்,

நிகழும் பிரபவ வருடம் ஆவணி மாதம் 13-ஆம் நாள் (29-08-87) சனி கிழமை பகல் 1-30 மணிமுதல் 3-00 மணி வரையுள்ள தனுலக்கின சுபவேளையில் திருவருள் கூட்ட,

| | |
|---|---|
| எனது புத்திரன்<br>திருநிறைச் செல்வன்<br>**சச்சிதானந்த மூர்த்தி**<br>(தொழில்நுட்ப உத்தியோகத்தர்,<br>திகலஸ்கம, கண்டி)<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறைச் செல்வி<br>**கலாநிதி**<br>அவர்களுக்கும் |

திருகோணமலை, வில்லூன்றிக் கந்தசுவாமி சந்நிதானத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை வாழ்த்தி, விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

விருந்துபசாரம் மணமகள் இல்லத்தில் 29-08-87 அன்று பிற்பகல் 4-00 மணி தொடக்கம் 6-00 மணி வரை நடைபெறும்.

(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை. இரு வீட்டார் அழைப்பு)

நன்றி.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திருமதி அருளம்பலம்
16, சமாது ஒழுங்கை,
திருகோணமலை

திரு. திருமதி வேலுப்பிள்ளை
'செல்வச்சந்நிதி ஸ்ரோர்ஸ்'
56, கடல்முக வீதி,
திருகோணமலை.

(1577)

## இன்று பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 28

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 30 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபர் திரு. நா. கணேசபிள்ளை தலைமையில் நடைபெறும். (ஒ)

★ கலர் பிலிம்சுருள்களை இரண்டு நாட்களில் Processing — Prinintg நவீனமுறையில் செய்து தருபவர்கள்

★ **கொழும்பு ஸ்ருடியோ** ★

55, பணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

★ ஐந்து(5) அதிஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர் பிலிம் சுருள் இனும்.

## அறிவித்தல்

1983 இன் பின் பாதிக்கப்பட்ட இடம் பெயர்ந்த ஊழியர்களுக்கான

### ஆலோசனைக் கூட்டம்

29 07.87 அன்று இலங்கை ஜனாதிபதிக்கும், இந்தியப் பிரதம மந்திரிக்கும் கைச்சாத்தான சமாதான ஒப்பந்தத்தின் பிரகாரம் 1983 ஜூலைக்குப் பின் நடந்த இனக் கலவரத்தின் பிரதிபலிப்பாக தத்தமது வேலைகளை விட்டு இடம்பெயர்ந்து வந்த அரச, கூட்டுத்தாபன, தனியார் துறை ஊழியர்களின் நிலைப்பாடுகளை ஆராயும் முகமாக எதிர்வரும் 6.9.87 [ஞாயிறு] காலை 9.30 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் ஒரு கூட்டத்தை நடத்த, பாதிக்கப்பட்ட ஊழியரின் இணைப்புக்குழுவின் நிர்வாக சபை தீர்மானித்துள்ளது ஆகவே மேற்குறிப்பிட்டபடி 1983 ஜூலைக்குப் பின் இடம் பெயர்ந்த அரச, கூட்டுத்தாபன, தனியார் துறை ஊழியர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு ஆலோசனை வழங்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

இங்ஙனம்,
தலைவர்.

நிர்வாக சபை,
பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழு,
95/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[1569]

# NEW MASTER INSTITUTE

B. M. C. Lane, JAFFNA — 241, Navalar Road, JAFFNA.

**88 A/L DAY CLASS** — **88, 89 A/L Weekend Class** நடைபெறுகின்றன.

பிரிவு I ஆரம்பம்:- 01-09-1987 செவ்வாய் காலை 8 30 மணி

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

- PHYSICS ★ திரு. சத்தியசீலன்
- CHEMISTRY ★ திரு. மக்லி
- BOTANY ★ திரு. செல்வநேசன்
- ZOOLOGY ★ திரு. நாகநாதன்
- PURE & APPLIED MATHS ★ திரு. A. பத்மநாதன்

| | | |
|---|---|---|
| 8-30 | 9-30 | PHYSICS |
| 9-30 | 10-30 | CHEMISTRY |
| 10-30 | 11-30 | Zoology |
| 11-30 | 12-30 | Botany |
| 10-30 | 11-30 | PURE & APPLIED MATHS |
| 11-30 | 12-30 | |

பிரிவு II ஆரம்பம்:- 19-09-87 காலை 8-30 மணி

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

- Physics திரு. வர்ணம்
- Chemistry திரு. தில்லைநாதன்
- Botany திரு. குகாதரன்
- Zoology திரு. நாகநாதன்
- Pure & Applied Maths திரு. நல்லையா

**88 A/L**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | 30 | 8 | 30 | physics | வெப்பவியல் |
| 8 | 30 | 9 | 30 | Botany | நுண்ணங்கி உலகம் |
| 9 | 30 | 11 | 30 | Zoology | நரம்புத்தொகுதி |
| 11 | 30 | 12 | 30 | chemistry | சேதனஇரசாயனம் |
| 12 | 30 | 1 | 30 | physics | வெப்பவியல் |
| 1 | 30 | 2 | 30 | Botany | தாழ்வகை தாவரம் |
| 2 | 30 | 4 | 30 | Zoology | மூளையவியல் |
| 9 | 30 | 11 | 30 | Pure & applied Maths | |

**89 A/L**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | 30 | 9 | 30 | Zoology | தொகுதிகள் |
| 9 | 30 | 10 | 30 | Botany | |
| 10 | 30 | 11 | 30 | cbemistry | பொது இர. |
| 11 | 30 | 12 | 30 | Physics | ஒளியியல் |
| 12 | 30 | 1 | 30 | Botany | உருவவியல் |
| 1 | 30 | 2 | 30 | Zoology | தொகுதிகள் |
| 1 | 00 | 3 | 00 | Pure & Applied Maths | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இந்தியா இலங்கை நாடுகளுக்கிடையில்

# மோதலை ஏற்படுத்தும் அமெரிக்க முயற்சி ஒப்பந்தம் மூலம் முறியடிப்பு

> இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில வார இதழ் 'போர்வேட்' (ஆகஸ்ட் 15) இல் வெளியான ஆசிரியர் தலையங்கம் இங்கு பிரசுரமாகின்றது.

## கம்யூனிஸ்ட் வார இதழ் "போர்வேட்" கருத்து

தற்போதைய அரசாங்கத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்பதும் அரசை நாம் விரும்பாததும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள வரவேற்கக் கூடிய சாதகமான அம்சங்களை கருத்துக்கு எடுப்பதைத் தடை செய்யவில்லை.

இதற்காக ஜனாதிபதி ஜெயவர்த்தனவைப் பாராட்டுபவர்களுடனும் அவருக்கு நோபல் மற்றும் சர்வதேச பரிசுகளை வழங்க வேண்டும் என்று கூறுபவர்களுடனும் எம்மால் சேரமுடியாமல் உள்ளது.

30 ஆண்டுகளுக்கு முன்னர் பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கு ஜெயவர்த்தன காட்டிய தீவிர எதிர்ப்பை நாம் மறக்க முடியாமல் உள்ளது.

'இணைப்பு-சி' யோசனையை புதைக்கும் அளவுக்கு அவர் விட்ட பிழையையும் நாம் மறக்க முடியாது.

இந்த இரண்டு தஸ்தாவேஜுகளில் கூறப்பட்ட யோசனைகளின் அடிப்படைதான் இன்றைய தீர்விலும் காணப்படுகின்றது.

அச்சந்தர்ப்பங்களில் திரு ஜெயவர்த்தனவும் அவரின் கட்சியினரும் வேறுவிதமாகச் செயற்பட்டிருந்தால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும்; உடைமைகள் பாதுகாக்கப்பட்டிருக்கும். கசப்புணர்வு, ஒற்றுமையின்மை, வேதனை ஆகியன தவிர்க்கப்பட்டிருக்கும்.

இவற்றைத் தெளிவாகச் சொல்வதுடன் சில ஆட்சேபனைகளுடன் இந்த ஒப்பந்தத்தை நாம் வரவேற்கின்றோம் என்பதைத் திட்டவட்டமாகக் கூற வேண்டியுள்ளது

இந்தியாவின் உதவியுடன் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று இடதுசாரி, தீவிர ஜனநாயக சக்திகளின் நிலைப்பாட்டை இந்த ஒப்பந்தம் உறுதிப்படுத்துகின்றது.

### திருப்புமுனை

இராணுவ ரீதியிலான தீர்வு நாட்டை அழிவுக்கே கொண்டு செல்லும் என்பதை இச்சக்திகள் கூறி வந்தன.

மிகவும் கஷ்டப்பட்டு எமது அரசு இதனை உணர்ந்து கொண்ட போதுதான் திருப்புமுனை ஏற்பட்டது.

ஐக்கிய இலங்கையில் பிராந்திய சுயாட்சி முறையை அமுலுக்குக் கொண்டுவருவதன்மூலம் தான் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்பட முடியும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

தேசிய ஒற்றுமை, சமாதானத்துக்கான புதிய அடிப்படையைக்கொடுப்பதன் மூலம் யதார்த்தபூர்வமான, செயற்படுத்தக்கூடிய இணக்கம் ஒன்றை ஒப்பந்தம் வழங்கியுள்ளது.

ஆகவே இந்த ஒப்பந்தத்துக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

### மோதல் முயற்சி

இந்தியா-இலங்கை நாடுகளுக்கு இடையே மோதலை ஏற்படுத்தும் அமெரிக்க ஏகாதிபத்திய முயற்சிகளை முறியடிக்கவும் எமது பிராந்தியத்தில் சமாதானம், பாதுகாப்பு, அணிசேராமை ஆகியவற்றைப் பலப்படுத்தவும் இந்த ஒப்பந்தம் உதவும்.

எமது நாட்டை தனது அரசியல், இராணுவ வலைக்குள் சிக்க வைப்பதன்மூலம் இந்தியாவைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈடுபட்டு வந்தது.

முதலாளித்துவ அரசுகள் இருக்கும் நாடுகளில் கூட வெளிநாட்டுத் தலையீடு இன்றி இருதரப்புப் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதும், அதன் மூலம் நல்ல அயல் நாட்டுக் கொள்கையைப் பலப்படுத்துவதும் இந்த ஒப்பந்தத்தில் காணப்படும் குறிப்பிடக்கூடிய அம்சங்களாகும்.

ஒப்பந்தம் கையெழுத்திட்டவுடன் அதுதானாகவும் பிரச்சினை இன்றியும் அமுல் நடத்தப்படும் என்று எண்ணுவது முட்டாள்தனமாகும்.

இனவாத வன்செயல்கள், சதி முயற்சிகள், இந்தியப் பிரதமர் மீதான கொலை முயற்சி ஆகியன இதனை நிரூபிக்கக் கூடியதாக உள்ளன.

முறியடிக்கப்பட்ட ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களின் நண்பர்களும் பலவழிகளாலும் ஒப்பந்தத்தை எதிர்க்க முயற்சிப்பர்.

மூடி மறைக்க முடியாமல் காணப்படும் அரசாங்கத்தில் நிலவும் ஒற்றுமையீனம் ஒப்பந்தத்துக்கு முட்டுக்கட்டையாக அமைய முடியும்.

பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்என்று வாதாடி வந்த சக்திகள் இதனைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தத்தில் காணப்படும் மதிப்புள்ள அம்சங்கள் நிறைவேற்றப்படுவதற்கான ஆதரவைக் கிடைக்கச் செய்வதில் இச்சக்திகள் தொடர்ந்து பாடுபடவேண்டும்.

(இ-எ)


# பிரயாண ஒழுங்குகள்

## ★ சவூதி அரேபியா

★ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் எம்மிடமுண்டு (வயது 22, 35)

| | | | |
|---|---|---|---|
| 1. | INDUSTRIAL ELECTRICIAN | — 3 — | 600 S. R. |
| 2. | CABLE JOINERS | — 3 — | 700 S. R. |
| 3. | LINES MAN | — 3 — | 600 S. R. |
| 4. | HEAVY EQUIPMENT OPERATORS | — 1 — | 650 S. R. |
| 5. | ACCOUNTS CLERK | — 3 — | 600 S. R. |
| 6. | MACHANIC DIESEL and PETROL | | 700 S R |
| 7. | LABOURERS | — 32 — | 350 S. R. |

(சாப்பாடு, இருப்பிட வசதியுடன்)

## ★ லெபனான் --- Cleaners

1. ஆண்கள் 20 வயதிற்கு மேற்பட்டோர் அடிப்படைச்சம்பளம் 3,500/, ரூபா (சாப்பாடு இருப்பிடத்துடன்)
2. பெண்கள் 20 வயதிற்கு மேற்பட்டோர் அடிப்படைச் சம்பளம் 2 500/- ரூபா (சாப்பாடு இருப்பிடத்துடன்)

## ★ சவூதி அரேபியா
**Security Guards**

5 வருஷ படைவீரர் அனுபவம் தேவை.
அடிப்படைச் சம்பளம் 600 S. R
வயது (30 - 35)

## II American Company (JEDDHA)

(A) 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் மட்டும் 500 S. R. இவர்களது பயண ஒழுங்குகள் 15-09-87 இற்கு முன்னர் செய்து கொடுக்கப்படும்.

(B) CARPENTERS 25 வயதிற்கு மேற்பட்டோர் உடன் தேவை

(C) 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் CLEANERS சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் 350 S. R.

## ★ IRAQ ★
(HOSPITAL CLEANERS JAPANESE COMPANY)

- 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் சம்பளம் இருப்பிட வசதியுடன் 65 டினார்
- ஏற்கனவே பாஸ்போட் தந்தவர்களுக்கு 31 ஆம் திகதிக்குள் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

## ★ T. இந்திரநாதன் ★
**M. THREE TRAVELS**
96, Kachcheri Nallur Road,
**Nallur, Jaffna.**
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)


### வாசகர் திருமுகம்

## இந்திய இராஜதந்திர உச்சக் கட்டம்!

ஜூலை மாதம் 29ந் திகதி புதுடில்லியின் ராஜதந்திரம் உச்சக்கட்டத்தை எய்தியது. விமான உணவுப் பொதி இறக்குதலில் ஆரம்பமான இந்திய ராஜதந்திரம், பின் உணவுக் கப்பல்களை அனுப்பி வைத்து மேலும் ஒருபடி சென்றது.

இதனை அடுத்துத் திரைமறைவில், இந்தியத் தூதுவர் ஜே. என் டிக்ஸிற்றும், அவரது செயலக உயர் அதிகாரிகளும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே மாறிமாறி, அதிவேக அரசியல் - அஞ்சலோட்டத்தில் ஈடுபட்டனர். இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தைத் துரிதப்படுத்த, டிக்ஸிற்றின் கையாள்ராகப் பணி புரிந்த இந்தியத் தூதரக முதற் செயலாளர் திரு. பூரியும், 'காப்டன்' குப்தாவும் இந்த அரசியல் அஞ்சலோட்டத்தில் பெரும் பங்கை வகித்தனர்,

திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனையும் அவரது முக்கியஸ்தர்களையும், மிகத் தந்திரமாக, சுதுமலையிலிருந்து ஹெலி மூலம் இந்தியாவிற்கு அழைத்துச் சென்றது, மேற்கூறிய உயர் அதிகாரிகளின் சாதுரியமே என்று கூறினால் மிகையாகாது.

புதுடில்லி நாசூக்காக விரித்த வலைக்குள் பிரபாகரனும் அவரது தோழரும் சிக்கினர்.

இதன் பின்னர் ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தம் கைச்சாத்தாகி, இந்திய அமைதிப் படையினரும் அனுப்பி வைக்கப்பட்டனர். வேலுப்பிள்ளை பிரபாகரன், பெரும் இராணுவ மரியாதைகளுடன் இந்தியப் படையினரால் மீண்டும் சுதுமலைக்குக் கொண்டுவந்து விடப்பட்டார். இரு தினங்களின் பின்னர் சுதுமலையில் நடந்த பிரமாண்டமான கூட்டத்தில் ஆயுதங்களை ஒப்படைக்கும் முடிவைப் பிரபாகரன் அறிவித்தார்.

பிரபாகரனின் மேற்கூறிய முடிவே, இந்திய இராஜ தந்திரத்தை அதி உச்ச ஸ்தானத்தில் அமர்த்தியது. மிகச் சீராக அமைக்கப்பட்ட இந்திய இராஜ தந்திரம் (India's well tailored Diplomacy) இதுவே ஆகும்.

இச்சந்தர்ப்பத்தில் நமக்செல்லாம் ஓர் ஐயம் எழுகின்றது. முக்கிய பங்காளராகிய திரு. பூரிக்கும், 'காப்டன்' குப்தாவுக்கும் மீண்டும் முன் போன்ற ஒரு வரவேற்பு இனியும் கிடைக்குமா? மலர் மாலைகள், மகஜர் கையளித்து வரவேற்பார்களா? Your guess is as good as mine.

-விக்டர். எஸ். கிருபராஜ்
யாழ்ப்பாணம்.



**பொய்யாமொழி**

**குறள்:**
உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

**பொருள்:**
ஒருவன் எண்ணியதை விடாமல் எண்ணிச் (சோர்வில்லாமல்) இருக்கப் பெற்றால் அவன் கருதியதை அடைதல் எளிதாகும்.

### ஞானக்கதிர்

## அடியார்க்கு அருளும் அன்னை

சக்தி வழிபாடு தொன்மை மிகுந்தது என்பதற்கு சிந்து வெளி நாகரிகம் சான்று பகர்கின்றது. சிவபெருமானின் கருணையே ஆதிபராசக்தி. சக்தியின்றேல் சிவமில்லை, சிவமின்றேல் சக்தியில்லை என்பர். சக்தி மூலமாகவே சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் புரிகின்றார். சக்தி கொண்ணும் அற்புதக் கோலங்கள் ஐந் தொழிலுக்கு ஆதாரமானவை. சக்தி மூர்த்தங்களில் துர்க்கை மூர்த்தம் இறைவனுக்கு ஒப்பாகும் மூர்த்தம் என வேதங்கள் உபநிடதங்கள் கூறும். கோயில்களில் ஓதப்படும் மந்திரங்களின் மகிமை, ஆகமங்களின் அனுசரணை, அந்தணர்களின் அபிஷேக ஆராதனை, மக்களின் வழிபாடு எல்லாம் மக்களுக்கு உயர்ந்த ஆன்ம நலத்தைத் கொடுக்கும் அருள் சக்தியை உண்டாக்குவதாகும். அதனாலேயே கோயில்களில் அபிஷேக ஆராதனை பூசை, அர்ச்சனை, திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மற்றும் கோயில்களில் சிற்பம், ஓவியம், கட்டிடம் இசை போன்ற கலைகள் வளர்ச்சப் படுகின்றன.

பழம் பெரும் பாரம்பரியத்தில் தோற்றம் கொண்ட தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயம் வட இந்தியாவிலுள்ள காசிவரை தலயாத்திரை சென்ற தெல்லிப்பழையிலுள்ள வவுனவத்தையைச் சேர்ந்த கதிர்காமர் என்னும் சைவப் பெரியார் ஒருவர் தாம் திரும்பும் போது துர்க்கை இயந்திரம் ஒன்றும், திருமுருகச் செண்டு ஒன்றும் கையோடு கொண்டு வந்தார். தாம் வழிபடும் பொருட்டு இவற்றை உமுகுடைப் பதியில் தாபனம் செய்தார். இச்சைவப் பெரியாரின் தனி வழிபாட்டு நிலையமாக இருந்த இக்கோயில் நாளடைவில் துர்க்கையின் அருட் சக்தியால் பொதுமக்களின் வழிபாட்டு ஆலயமாக மாறியது. நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் மாவிட்டபுரம் முருகப் பெருமானுடன் மானம் புத் தொடர்பு கொண்டு நவராத்திரியை மையமாக வைத்து இயங்கும் உருவில் சிறிதும் அருளிற் பெரிதுமாகிய இவ்வாலயம் துர்க்கையை மூல மூர்த்தியாகவும் நீண்ட காலமாக ஈழத்தில் தனியாலயமாகவும் விளங்கும் சிறப்புப் பெற்றது.

இவ்வாலயத்தின் புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் 1965 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் திருவோணத்தில் மாவை ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் அவர்களினால் கிரிகைச் சிறப்புடன் நிறைவேறிய பின்பு சாந்நித்தியம் நிறைந்த ஆலயமாக துர்க்காதேவி ஆலயம் திகழ்வது கண்கூடு. வல்வினையகற்றி மக்களை மாயை இருளினின்றும் காத்து இனிய நல்லூராம் தெல்லியூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ துர்க்காதேவியின் அருட்கருணைப் பெருமை சொல்லுந் தரமன்று. கொடியேற்ற விழா சிறப்புடன் ஆரம்பமாகி விசேட பூசைகள் மற்றும் தேவியின் திருவுலாக் காட்சி மிகவும் சிறப்புடன் நிகழ்வதைக் காணக் கண் ஆயிரம் வேண்டும். சீறும் சிங்கத்திலே சிங்காரித்த ஸ்ரீ துர்க்காதேவியைக் காண்பவர் கண்கள் கனகாலம் வாழும், இது கண்கூடு. கல்வி செல்வம். வீரம் முக்கொடைக்கும் முதலான அம்பாள் வீரத்தின் வடிவாசத் தெல்லியூரில் குடிகொண்டு அயலூர் அவ்வூர் மக்களைக் கொடுங்கோலிலிருந்து காத்தருளி வருகின்றாள். அம்பிகையின் சிறப்பை அபிராமிப்பட்டர் தமது அபிராமியந்தாதியில் "தனந்தரும் கல்வி தரு மொருநாளுந் தளர்வறியா, மனந்தருந் தெய்வவடிவுந் தரு நெஞ்சில் வஞ்சமில்லா இனந்தரும் நல்லன எல்லாம் தருமன்பர் என்பவர்க்கே, கனந்தரும் பூங்குழலாளபிராமி கடைக்கண்களே" எனக் கூறக் கண்டோம். உலக சக்திகளுக்கு ஊன்று கோலாக விளங்கும் அன்னை, சூரிய சந்திரரில் ஒளியாகவும், பூவில் மணமாகவும், நீரில் தண்மையாகவும் விளங்குகின்றாள். தன்னை நம்பிய பக்தர்களின் துயர் துடைக்க ஸ்ரீ துர்க்காதேவி புரிந்த அற்புதங்கள் பல. புரிந்துள்ள அற்புதங்களைப் போல அவளின் பெயரும் பல. அம்பிகை, அம்பாள், பவானி, உமை, காளி, சாமுண்டி, பகவதி, உருத்திராணி, குங்குமக்காரி, நாராயணன் சோதரி, ஆதிபராசக்தி, நவராத்திரி நாயகி, மகிஷனை வதைத்திட்டதாய் என்பன. கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகும் அன்னையின் மகோற்சவமானது அழித்தல் தொழிலைக் குறிக்கும் தேர்த்திருவிழாவுடனும், அருளலைக் குறிக்கும் தீர்த்தத் திருவிழாவுடனும், முடிவில் காவல் தெய்வம் வைரவமூர்த்திக்கு நன்றி செலுத்தும் முகமாக வைரவ பொங்கலுடன் நிறைவு பெறும்.

நடைபெறும் பன்னிரண்டு திருவிழாக்களின் முடிவில் அம்பாளின் அருளை நாள்தோறும் நினைவு கூரும் முகமாக அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. தமிழகத்தில் மதுரையிலே மீனாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும், கன்னியாகுமரியில் பகவதி அம்மனாகவும், ஈழயாழ்ப்பாணத்தில் வீரமாகாளியாகவும், நயினையில், நாகபூஷணியாகவும், திருகோணமலையில் பத்திரகாளியாகவும், மாத்தளை, சுன்னகத்தில் முத்துமாரியாகவும் அவதரித்து அருள் புரிந்து கொண்டிருக்கும் அம்

(5 ஆம் பக்கம் பார்க்க

-திருமதி காவேரி யோகநாதன்-


**New Master Institute**
Navalar Road, Jaffna.
G. C. E. A/L 1988.
Physics - Varnam
★ HEAT ★
ஆரம்பம்:- 29-8-87
நேர அட்டவணை:
Sat. & Sun. 7-30 — 8-30 a. m.

மீண்டும்
★ ஹோட்டல் ரெலெக்ஸ் ★
உங்களின் ஏகோபித்த அபிமானத்தைப்பெற்ற
★ ஹோட்டல் ரெலெக்ஸ் ★
நேற்று (27-08-87) தொடக்கம் மீண்டும் தனது சேவையை தொடங்கியது
★ தேன் சிந்தும் ஐஸ்கிறீம் வகைகள்
★ மட்டன்ரோல் ★ பற்றீஸ்
★ பொம்பே சுவிற்ஸ்
★ மற்றும் குளிர்பான வகைகளுக்கும்
★ சுவைமிகுந்த கோழிப்புரியாணிக்கும்
★ ஹோட்டல் ★
★ ரெலெக்ஸ் ★
340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

## கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 17,000 குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணம்

கிளிநொச்சி, ஆக. 28

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சுமார் பதினேழாயிரம் குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக ஐந்து மாத காலத்திற்கு வரட்சி நிவாரணம் வழங்க சமூகசேவைத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு குடும்ப அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு சிரமதான அடிப்படையில் பொதுமக்களை ஈடுபடச்செய்து அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைகள் பூநகரி, பளை, கிளிநொச்சி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

விவசாயக் கூலிக்குடும்பங்களுக்கும், குறைந்த அளவிலான விவசாயக் காணிச் சொந்தக்காரர்களுக்குமே இந்நிவாரணம் வழங்கப்படுவதாகவும் இதற்காக மாதம் ஒன்றுக்கு சுமார் அறுநூற்றி முப்பத்தாறு மெற்றிக்தொன் அரிசி, மா போன்ற உணவுப் பொருள்களை சமூகசேவைத் திணைக்களம் வழங்கும் எனவும் தெரிய வந்துள்ளது.

கிராமங்கள் தோறும் வரட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டியவர்களது பட்டியலை அவ்வப்பகுதி கிராமசேவகர்கள் தயாரிப்பதுடன் சிரமதானம் மூலம் மக்களை ஈடுபடுத்தி அதில் கலந்து கொள்பவர்களுக்கு சீரான விநியோகம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளுமாறும் கிராமசேவகர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக விசேட உணவு முத்திரைகள் வழங்கப்படுமெனவும், இம்மாதம் முதல் நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிய வந்துள்ளது. (ஒ-76)

### பிரசைகள்குழு அழைக்கிறது

யாழ்ப்பாணம், ஆக. 28

வேலைகளை புனரமைப்பு வேலைகளை துரிதமாக மேற்கொண்டுவரும் குரும்பசிட்டிப் பிரசைகள்குழு யாழ்ப்பாண நடவடிக்கை குரும்பசிட்டி சித்தி விநாயகர் ஆலயக்கும்பாபிஷேகத்தில் அனைத்து மக்களையும் வந்து கூடும்படி அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் பிராயச்சித்தமும் கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளன.

ஆலயத்தைச் சீராக்கி கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்த ஆலய முகாமையாளர் திரு.இ. மகேசன் துரித முயற்சிகளைச் செய்துவருகிறார். (ஒ)

### நோர்வே பிரதிநிதிகள் அதிர்ச்சி

குரும்பசிட்டி கிராமத்துக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட நோர்வேசெஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் குடிசைவாழ் மக்களின் நிலைகண்டு அதிர்ச்சியடைந்தனர்.

பாதிப்புற்ற மக்களைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து உரையாடினர்.

உடுக்க உடையின்றித் தவிக்கும் இம்மக்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்வதாகவும் அவர்கள் கூறினர். (ஒ)

### திருமலையில் இலவச மருத்துவ சேவை

திருகோணமலை, ஆக. 28

திருமலை நகரசபை மண்டபத்தில் இந்திய அமைதி காக்கும் பிரிவினரால் இலவச மருத்துவ நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெருவாரியான மக்கள் அங்கு சென்று இலவச மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மக்கள் முகம்

### செஞ்சிலுவைச் சங்க நிர்வாகிகள்

கிளிநொச்சி, ஆக. 28

கிளிநொச்சி மாவட்டத்திற்கான செஞ்சிலுவைச் சங்கக் கிளை அண்மையில் கிளிநொச்சிக் கச்சேரியில் வைத்து அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புதிய கிளையின் தலைவராக கிளிநொச்சி உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி எஸ். வாமதேவனும், உப தலைவராக மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அமிர்தலிங்கமும், செயலாளராக கிளிநொச்சி தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் கே. துரைராஜாவும், பொருளாளராக நவஜீவன நிர்வாகி த. கிருபானந்தராசாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் ஐந்து பேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-76)

### மது ஒழிப்பு விழா

யாழ்ப்பாணம், ஆக.28

''பொறாட்'' நிறுவனத்தின் ஆதரவில் அராலி தெற்கு, மேற்கு நல்லொழுக்க வாலிபர் சங்கங்கள் ஒன்றிணைந்த இல்ல விளையாட்டுப் போட்டியும் மது ஒழிப்பு விழாவும் 'பொறாட்' நிறுவன செயல் இணைப்பாளர் திருமதி டொனேசன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவை விஷேட அதிகாரி திரு.ந. சந்திர

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையை தனதாக்கிக் கொள்ள இலங்கை அரசு பாடுபடுகிறது

கல்முனை, ஆக 28

''சமாதான ஒப்பந்தம் எழுதப்பட்டபின் நாமெல்லாம் கொண்டாட்டம் நடத்திய வேளையில் திருமலையில் தமிழ்ச் சகோதரர்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். திருமலையைத் தனதாக்கிக் கொள்ள இலங்கை அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

திருகோணமலையில் இன்று தமிழர் தமிழ் பேசமுடியாத நிலையேற்பட்டுள்ளதால் தமிழ்ஈழ விடுதலைப் புலிகளின் சகல நடவடிக்கைகளும் திருமலையை மையமாக வைத்தே நடைபெறும்.

பெரியகல்லாற்றில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் காரியாலயத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு. பிரான்சிஸ் மேற்கண்டவாறு கூறினார்,

கல்லாறு புலிகள் பொறுப்பாளர் திரு. ரதன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் திரு. பிரான்சீஸ் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் போராளிகள் பலரைப் பலிகொடுத்துப் பெற்ற ஆயுதங்களை வேண்டா வெறுப்பாகவே ஒப்படைத்தோம்.

ஸ்ரீலங்கா அரசினால் தமிழ் நிலம் நாளாந்தம் சுவீகரிக்கப்பட்டு வருவதுடன் தமிழ், முஸ்லிம் மக்களின் கல்விப் பொருளாதாரம்., சுதந்திரம் அனைத்தும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

எமது தமிழ் ஈழ முழு அரசை நியமிக்கும்வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.

மாநில அரசு ஆயுதப் போராட்டத்தை பின்னடையச் செய்யும். இருந்தும் நாம் தொடர்ந்து போராடுவதற்கு மக்களின் ஒத்துழைப்பு தொடர்ந்து இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. டயஸ்பேசுகையில்:

''இவ்வளவு காலமும் இந்தியாவில் உல்லாசமாகத் தங்கியிருந்துவிட்டு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உங்கள் முன்வருகின்றார்கள், பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்'' என்றார்.

கல்முனைப் பிரதேச புலிகள் இயக்கப் பொறுப்பாளர் திரு. ரமணன் பேசுகையில்;

''ஆயுதம் ஏந்தியவர்கள் பட்டுந்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்ல, தமிழ் மக்கள் எல்லோருமே பங்காளிகள்தான், நாமும் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுப் பேனா முனைப் போராட்டம் நடத்தவே முன்வந்துள்ளோம் என்றார், (ஒ-84)

### இன்று முதல் விடுதலை

கொழும்பு, ஆக. 28

பூஸா, பெலவத்த முகாம்களில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் தொகுதி தொகுதியாக விடுதலை செய்யப்படுவர். (உ-எ)

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### நல்லூர்ப் பகுதிக்கு நிவாரணம் இல்லை

குருநகர், ஆக, 28

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பகுதிக்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு இந்திய நிவாரண உணவுப்பொருள்கள் வழங்கப்படமாட்டாதெனத் தெரிய வந்துள்ளது.

இப்பகுதியில் அகதிகளாக வந்து தங்கியவர்களுக்கு மட்டுமே இந்திய நிவாரணப் பொருள்கள் கிடைத்தன.

ஏனைய பகுதிகளில் சகலருக்கும் வழங்கப்பட்ட இந்திய நிவாரண உணவுப்பொருள்கள் நல்லூர் அரசாங்க அதிபர் பகுதிக்கு வழங்குவதற்கு போதிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லாமல் இருப்பதே காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் இதுவிடயத்தை உதவி அரசாங்க அதிபரைச் சந்தித்து முறையிட உள்ளன. (ஒ-51)

### பாதிப்புற்றோர் கவனிக்க வேண்டியது

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமது சேத விவரங்களை சத்தியக்கடதாசி மூலம் சமர்ப்பித்து இருந்தாலும் தவறாமல் பாதிப் புற்றோருக்கான புனர் வாழ்வுத்திட்டப் படிவங்களை நிரப்பி அனுப்பவேண்டும்.

இவ்வாறு யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-51)

### வயாவிளான் மக்களின் கவனத்திற்கு

வயாவிளான் பலாலி தெற்கு கிராம சேவகர் பிரிவு மக்களுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் பாதிக்கப்பட்டோர் புனர் வாழ்வுத் திட்டத்திற்கான விண்ணப்பப் படிவம் இப்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

வயாவிளான் கிராம சேவகர் அலுவலகத்தில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பாதிக்கப்பட்டவர்கள் தமக்குரிய விண்ணப்பப் படிவங்களை நிரப்பி செப்டெம்பர் 2 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் சேதங்கள்பற்றிய புகைப்படம், பொலீஸ் அறிக்கை போன்றவை அனுப்புவது பயனுடையதாகும்.

இத்தகவல்களை வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையத்தலைவர் திரு. வ. சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஒ)

### முடிவு திகதி இன்று

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் நடத்தும் ஆறுபேர் பங்கு பற்றும் அறுஒவர்களைக்கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இன்றாகும்.

'நொக் அவுட்' முறையிலான இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்களை இன்று மாலை 5-00 மணிக்கு முன்னர் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் ஒப்படைக்கலாம். (ஒ-7)


நவீன அணுகுமுறையில் தயாரிக்கப்பட்ட சக்தி வாய்ந்த திரவ கெந்தகம் (சல்பர்)

சுப்பர் சிக்ஸ்




மிளகாய் குருமன் நோயை கட்டுப்படுத்தவும் திராட்சை பூஞ்சண நோய் (டௌனி மில்டியு) கட்டுப்படுத்தவும் மற்றும் பயிர்களில் இலையில் ஏற்படும் துரு நோயையும் சிற்றுண்ணிகளையும் கட்டுப்படுத்த அதி சிறந்தது.

எச்சரிக்கை:- எல்லா பீடை நாசினிகளும் அபாயகரமானவை கவனமாக கையாளவும்.

விலை:
200 மி.லி. ரு. 31.50
500 மி.லி. ரு. 65.50
9.46 லீ. ரு. 1110.00

அங்லோ-ஏசியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டெட்
த.பெ. இல. 1034, சாற்றர் வங்கி கட்டிடம் கொழும்பு-1.



### பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★

★ பின்வரும் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட இருப்பதால் விருப்பமுள்ளவர்கள் 30-08-1987 க்குப் பிந்தாமல் தொடர்புகொள்ளவும்.

★ குறைந்தபட்சம் 3 வருட அனுபவம்

★ 1. CLERKS SR 1200 (Graduate)
★ 2. COMPUTER OPERATOR SR 1500 (Diploma / Certificate)
★ 3. MECHANICS SR 1500 ,, (H. E. M./L. V. M.)
★ 4. MECHANICS SR 1500 ,, ELECTRICAL
★ 5. MECHANICS HYDRAULICS SR 1500 ,,
★ 6. MECHANICS AIR CONDITIONING SR 1500 ,,
★ 7. MECHANICS (GENERATORS) SR 1500 ,,
★ 8. TYRE REPAIRMAN SR 1000
★ 9. LABOURER FUEL ATTENDENT SR 950
★ 10. LUBEMAN SR 950
★ 11. MECHANIST WELDER SR 1200
★ 12. AUTO BODY REPAIR SR 1200
★ 13. AUTO PAINTER SR 1200
★ 14. HEAVY DUTY DRIVERS SR 1200

**1 SR. 7.45 RS.**
**Labour Licence 96**
**Approval No. AL/96/13/87**

Head Office:
Construction & Development Company Ltd.
37, S. De S, Jeyasinghe Mawatha, NUGEGODA.

தொடர்பு:-
V. P. பாலசுப்பிரமணியம்
(V. P. BALA)
C/o N.V. பொன்னுத்துரை
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

கடவுளின் அருள், மனத்தை உயர்ந்த பொருளை நாடிச் செல்லும்படி தூக்கிவிடும்.
— அன்னை சாரதாதேவி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
28.8.1987 உ. பெ. இல - 83


## இலங்கைக்கே முதலில் வேண்டும்

அரசியலில் மதத்தைக் கலப்பதைத் தடை செய்வதற்கு விரைவில் சட்டம் கொண்டு வரப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் அல்ல, இந்தியாவில்.

இந்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங் இதுகுறித்து லோக சபையில் அறிவித்திருக்கிறார். பஞ்சாப்பில் மதத்தைப் பயன்படுத்தி அரசியல் குழப்பங்கள் நடைபெறுகின்றன. மதத்தை முன் வைத்தே அங்கு தனிநாட்டுக் கோரிக்கையும் எழுந்தது.

அதன் காரணமாகவே அரசியலில் மதத்தைக் கலக்காது தடைச்சட்டம் கொண்டு வரவேண்டிய அவசரமும் அவசியமும் இந்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

மதம் மக்களின் வாழ்க்கை வழிகாட்டி. உலகியல் வாழ்க்கையை சரிவர வாழவும், ஆன்மீக வாழ்வுக்குப் பலமளிக்கவும் உருவாக்கப்பட்ட நன்னெறிகளே சமயங்கள். அவை வெவ்வேறு போதனைகளை அடிப்படையாக வைத்து வெவ்வேறு பெயர்களில் பின்பற்றப் பட்டாலும் அவற்றின் இலட்சியம் ஒன்றே. உப நதிகள் பலவும் ஈற்றில் பிரதான நதியில் சேர்வதுபோல, நதிகள் பலவும் கடலில் சங்கமிப்பது போல, மதங்கள் யாவும் நன்னெறி வாழ்வையும், ஆன்மீக ஈடேற்றத்தையுமே இறுதி இலட்சியங்களாகக் கொண்டவை.

அவ்வாறான மதங்களை, மக்கள் தங்களைத் தாங்களே பிரித்துக் கொள்ளவும், அழித்துக் கொள்ளவும் பயன் படுத்துவது கண்டிக்கத்தக்கது. மதத்தை அனுஷ்டிப்பது வேறு; மத உணர்வு வேறு; மதவெறி வேறு. சமய வாழ்வு வாழலாம் ஆனால் சமயவெறி வரக்கூடாது. சமய வெறியானது, சம்பந்தப்பட்ட சமயம் போதிக்கும் நெறிகளுக்கு முரணாகச் செயற்படவும் தூண்டுகிறது. அப்போது சமயம், சமய வாழ்வு என்பனவற்றை மதவெறி அர்த்தமற்றதாக்கி விடுகிறது. சமயவெறி அரசியலில் சேர்க்கப்படும் போது சமயத்தின் மகத்துவமும், மகோன்னதமும் அற்றுப் போகின்றன.

ஆனால் அரசியல் லாபம் தேடும் தீயசக்திகள் மதத்தை அரசியலோடு சேர்த்து விடுகின்றன. மதத்தை முன்னுக்குக் காட்டி மத வெறியைக்கிளறிவிட்டுத்தமது அரசியல் நலன்களை ஈட்டுகின்றன. இலங்கையில் அதிலிருந்து பல படிகள் மேலே சென்ற மதகுருமாரே அரசியலை நிர்ணயிக்கும் அளவுக்கு நிலைமை மோசம் அடைந்திருக்கிறது. சுதந்திரத்துக்குப் பின்னர், பௌத்த மதத்துக்கு முதல் இடம் கொடுக்கும் கோஷம் எழுப்பப்பட்டது. ஒருசில அரசியல்வாதிகள் தங்கள், நலன்களை அடைவதற்காக மதகுருமாரைத் ''தூக்கி வைத்தார்கள்'. அவர்களுக்கு அளவுக்கு அதிகமான இடம் கொடுத்தார்கள். அதன் பெறுபேறாக இலங்கையில் பதவிக்கு வரும் கட்சி எது என்பதை மதகுருமாரே நிச்சயிக்கும் அனுச்சாரம் உருவானது.

காலப்போக்கில் பௌத்த மத செல்வாக்கு அரசியலில் கலந்தது. பௌத்த மதமே இலங்கை அரசியல் என்ற வெட்கக்கேடான நிலை ஏற்பட்டது. தமக்கு வழங்கப் பட்ட முதன்மைத்துவத்தைப் பயன்படுத்தி பௌத்த குருமார் அரசியலில் இரண்டறக் கலந்தார்கள்.

அதன் விளைவு இந்த நாட்டின் தேசியப் பிரச்சினையாக உருவெடுத்த தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் எப்போதும் தடையாக இருந்தார்கள். இந்த நாடு சிங்கள நாடு, பௌத்த நாடு, மற்றவர்களுக்கு இடமில்லை என்று கூறும் அநாகரிக நிலைக்குக் கூட பௌத்த குருமார் அரசியலைக் கலக்கி அடித்தார்கள். தமிழர் பிரச்சினை தீராமல் இருப்பதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் மட்டுமன்றி பௌத்த குருமாரும் முழுமுதற் காரணிகள் என்பதை இலங்கை அரசியல் தெரிந்த எவரும் ஒப்புக்கொள்வர்.

பௌத்த குருமாருக்கு அரசியலில் முதலிடம் கொடுத்ததால் ஏற்பட்ட தீமைகளை இப்போது தென்னிலங்கைத் தலைவர்களும் உணரத் தொடங்கி உள்ளனர்.

ஆகவே அரசியலும் சமயமும் சமாந்தரமாகக் கோடிட்டு அவற்றுக்குரிய பண்புகளுடனும், குணம்சங்களுடனும் செயற்படுவதும் அவசியம். ஆகவே இந்தியாவை விட, அரசியலில் மதத்தைக் கலப்பதைத் தடை செய்யும் சட்டம் இலங்கைக்குத் தான் முதலில் அவசியம். இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ள ஜனாதிபதி அரசியலில் இருந்து மதத்தையும் மதகுருமாரையும் தூர வைப்பதற்கான தடைச்சட்டம் ஒன்றை உடனடியாகக் கொண்டுவர வேண்டும்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்யக் கஷ்டப்பட்டுத் திக்குமுக்காடும் இந்த நிலையிலாவது அரசியலையும் மதத்தையும் தனித்தனியாக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா? அல்லது சிங்கப்பூர் ஜனாதிபதி லீ குவான் யு போன்று மற்றும் பல உலகத் தலைவர்களும் மதம் கலந்த அரசியலுக்கு இலங்கையை உதாரணம் காட்டிப்பேச இனியும் இடம் கொடுப்பாரா?

★ இனக்கலவரத்தை அடுத்து

# கராச்சியில் படையினர் வீடுவீடாகத் தேடுதல்

கராச்சி, ஆக 27

கராச்சி நகரில் கடந்த புதன்கிழமை மீண்டும் ஏற்பட்ட இனக் கலவரத்தைத் தொடர்ந்து வீடு வீடாக ஆயுதங்களைத் தேடும் பணியில் ஆயுதப் படையினர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊரடங்குச்சட்டத்தை மீறுபவர்கள், குழப்பம் விளைவிப்பவர்களைக் கண்டால், கண்ட இடத்தில் சுடும்படி பாகிஸ்தான் அரசு பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிட்டுள்ளது

புதன்கிழமை நடந்த கலவரத்தில் பத்துப் பேர் உயிரிழந்தனர்; பதினெட்டுப் பேர் வரையில் காயமடைந்தனர்.

மொஹஜிர் இனத்தவருக்கும், டஷ்டூன் இனத்தவருக்கும் இடையே அடிக்கடி கலவரம் இடம் பெற்றுவருவது தெரிந்ததே

கடந்த பத்து மாதங்களில் இரண்டு இனத்தவருக்குமிடையே நடைபெற்றுவரும் கலவரங்களில் இதுவரை சுமார் 300 பேர் கொல்லப்பட்டனர்.

கட்சிக் கொடி ஒன்றைப் பொது இடத்தில் பறக்க விடப்பட்ட சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தைத் தொடர்ந்தே கடந்த புதன்கிழமை மீண்டும் கலவரம் ஆரம்பமானது.

(இ-எ)

### சமஸ்கிருத வளர்ச்சிக்கு புதிய திட்டம்

புதுடில்லி, ஆக 27

சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்காக இந்திய மத்திய அரசு திட்டம் ஒன்றைத் தயாரித்து உள்ளது.

இப்படி இந்திய லோக சபையில் கல்வித்துறை இணை அமைச்சர் திருமதி கிருஷ்ணா சாஹி தெரிவித்தார்.

பழம்பெரும் மொழியான சமஸ்கிருதம் புறக்கணிக்கப்படுகின்றது என்று எதிர்க்கட்சி எம். பி. என் சி. சதுர்வேதி தெரிவித்தார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே இணை அமைச்சர், ''சமஸ்கிருத வல்லுநர்களுக்கு புலமைப் பரிசிலாக வழங்கப்படும் தொகை ஐயாயிரம் ரூபாவில் இருந்து பன்னிரண்டாயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது''– என்று சொன்னார்.

### கொன்று வானொலியில் றேகன்

வாஷிங்டன் ஆக 27

அமெரிக்க அதிபர் றேகன், கொன்று கிளர்ச்சிக்காரர்கள் நடத்தும் வானொலி மூலம் நிக்கரகுவா மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

கடந்த திங்கள் கொன்றுவானொலி இந்த உரையை ஒலிபரப்பியது மூன்று நிமிடங்கள் மட்டும் இடம் பெற்ற இந்த் ஒலிபரப்பை நிக்கரகுவா அரசு குழப்பியடித்தது. (இ-எ)

# ராமஜன்ம பூமி பிரச்சினை தீர்த்து வைக்கப்படும்

புதுடில்லி ஆக. 27

ராமஜன்ம பூமிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும்

இப்படி இந்திய லோக சபையில் அறிவிக்கப்பட்டது.

வகுப்புக் கலவரங்கள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு இத்தீர்வைக் காணும் – இப்படி உள்துறை அமைச்சர் பூட்டாசிங் லோகசபையில் தெரிவித்தார்

உத்தர பிரதேசத்தில் உள்ள அயோத்தி ராமஜன்ம பூமி என்று அழைக்கப்படுகின்றது

அங்கு முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலமான பப்ரி மஸ்ஜித்தும் உள்ளது.

இந்த இரண்டும் இந்து, முஸ்லிம் மக்களுக்கு இடையே அடிக்கடி மோதலை ஏற்படுத்தி வருகின்றது

இது பற்றிய விவாதத்தில் பேசிய அமைச்சர் பூட்டா-சிங் மாநில மக்களே இப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு காணப்பட வேண்டும்'– என்று சொன்னார்.

வகுப்பு வாதத்தை எதிர்த்துப் போராட மத்திய அரசு செயல் திட்டம் ஒன்றைத்தயாரித்து வைத்து இருப்பதாகவும் அமைச்சர் பூட்டாசிங் சொன்னார்.

(இ-எ)

### 4 கோடி டாலர் துண்டு விழுகிறது

வாஷிங்டன், ஆக. 27

அமெரிக்காவின் மூன்று மாதகால வர்த்தகத்தில் 4 கோடி டாலர் துண்டு விழுந்திருப்பதாக வர்த்தக அமைச்சு அறிவித்து உள்ளது.

ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையான காலப் பகுதியில்தான் வர்த்தகத் துறையின் ஏற்றுமதியில் வீழ்ச்சி காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலைமையைச் சீர் செய்ய இறக்குமதிக் கட்டுப்பாடு கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## வெளி உலகில்

### சர்வதேச கிரிமினலாக றேகன் கருதப்படுவார்

மனாகுவா, ஆக. 27

கொன்று கிளர்ச்சிக்காரர்களுக்கு தொடர்ந்து உதவுவாரானால் ''சர்வதேசக் கிரிமினல்'' ஆகவே அமெரிக்கஅதிபர் றேகன் கருதப்படுவார்.

நிக்கரகுவா வெளிநாட்டமைச்சர் டிஸ்கொட்டோ மேற்கண்டவாறு அறிவித்தார்.

நிக்கரகுவா அரசுக்கு எதிராக கொன்று கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்க அரசு உதவும்வரை, மத்திய அமெரிக்க நாடுகள் உருவாக்கிய சமாதான ஒப்பந்தத்தை நிக்கரகுவா அரசு ஏற்றுக் கொள்ளமாட்டாது.

ஐந்து மத்திய அமெரிக்க நாடுகள் உருவாக்கிய சமாதான ஒப்பந்தத்தின்படி நிக்கரகுவாவில் சிவில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும், ஜனநாயக நடைமுறைகள் அமுல் நடத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு உள்ளது.

(இ-எ)

### யுத்தத்துக்கு முடிவு காண முயற்சி

ஐ நா, ஆக. 27

ஈரான், ஈராக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக ஐ நா. பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் மீண்டும் தீவிரமாகப் பரிசீலனை செய்துவருகின்றனர்.

யுத்த நிறுத்தம் அனுஷ்டிக்கும்படி ஐ நா. ஏற்கனவே விடுத்த வேண்டுகோளை ஈரான் புறக்கணித்துவிட்டது தெரிந்ததே (இ-எ)

## 'நியூஸ்வீக்' மீது இந்திய அரசு நடவடிக்கை எடுக்கும்

புதுடில்லி, ஆக 27

இந்திய நாட்டின் சில பகுதிகளைச் சீனப் பிரதேசமாகக் காட்டும் வரைபடம் ஒன்றைப் பிரசுரித்ததற்காக, அமெரிக்கச் சஞ்சிகை 'நியூஸ் வீக்' மீது இந்திய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

உள்துறை அமைச்சர் பூட்டாசிங் இந்திய லோகசபையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகப் படத்தில் இந்தியப் பிரதேசம் பற்றித் தவறான தகவல்களைக் கொடுப்பவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கக்கூடியதாகக் குற்றவியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அரசு தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

## மின்சார வேலியில் சிக்கி 31 பேர் மரணம்!

கேப்டவுன், ஆக. 27

தென் ஆபிரிக்காவினுள் அகதிகள் வருவதைத் தடுக்குமுகமாக, கிழக்கு எல்லையில் நிறுவப்பட்டிருக்கும் மின்சார வேலியில் சிக்கி 31 பேர் உயிரிழந்துவிட்டனர்.

அனைவரும் மொஸாம்பிக் நாட்டவர் என்று தென் ஆபிரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்தார்.

மொஸாம்பிக் நாட்டில் இருந்து தினமும் சுமார் 1500 பேர் அகதிகளாகத் தென் ஆபிரிக்காவினுள் சட்டவிரோதமாக நுழைகின்றனர்.

இவர்கள் வருவதைத் தடுக்க, கிழக்கு எல்லைப் புறத்தில் வேலி அமைக்கப்பட்டு, அதற்கு மின்சாரம் பாய்ச்சப்பட்டுள்ளது.

இதில் சிக்கியவர்கள் உயிரிழந்தனர்.

இப்படிப் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்

(இ-எ)

### சென்னையில் இசை நோன்பு

சென்னை, ஆக. 27

72 மணித்தியால 'இசை நோன்பு' சென்னையில் நடத்தப்பட்டது.

நூற்றி ஐம்பது வித்வான்கள் இதில் கலந்து கொண்டனர்.

சென்ற 20ஆம் திகதி மாலை பிரபல சங்கீத வித்வான் செம்மாங்குடி சினிவாசஐயர் இதனைத் தொடக்கி வைத்தார்.

அவரே முதலாவது இசைக் கச்சேரியை நிகழ்த்தினார்.

சர்வதேச சமாதானம், செழிப்பு, இயற்கையின் கோபத்தைக் தணித்தல், சமூகத்தில் நல்லொழுக்க நெறியை வளர்த்தல்— ஆகியவற்றுக்கு இறைவனை வேண்டியே இந்த இசை நோன்பு நடத்தப்பட்டது.

தொடர்ந்து 24 மணித்தியாலம் கோட்டு வாத்தியம் இசைத்துச் சாதனை புரிந்த வித்வான் ரவிசரனின் சிந்தனையில் உதித்த இந்த 'இசை நோன்பு' சென்னை அடையாறு ஆனந்தபத்மநாப சுவாமி ஆலயத்தில் நடைபெற்றது. (இ-எ)

### சமரசயோசனை நிராகரிப்பு

கேப்டவுன், ஆக. 27

தென் ஆபிரிக்கச் சுரங்கத்தொழிலாளரின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமுகமாக நிர்வாகம் சமர்ப்பித்த யோசனைகள் நிராகரிக்கப்பட்டன.

கறுப்பு இனத்தொழிலாளர் பெரும் எண்ணிக்கையில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கமே யோசனைகளை நிராகரித்து விட்டது. (இ-எ)

### உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையை ஆரம்பிக்க உதவி தேவைப்படுகிறது

யாழ்ப்பாணம், ஆக. 28

அண்மையில் நடந்த அசம்பாவிதங்களில் சேதமடைந்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை வளவில் கொட்டகைகள் போடப்பட்டு எதிர்வரும் 31ஆம் திகதி அங்கு வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன.

கொட்டகைகள் அமைக்க கிடுகு, மரங்கள் போன்றவற்றை தந்துதவ விரும்புவோர் பாடசாலை அதிபரிடமோ, அல்லது சுன்னாகம் யாழ். பிரதேச மின் பொறியியலாளரிடமோ தொடர்பு கொள்ளலாம்.

இதேவேளை, பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயற்குழுக் கூட்டம் நாளை சனிக்கிழமை பி. ப. 3-30 மணியளவில் பாடசாலையில் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

(ஒ)

### அடியார்க்கு----

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பாள் தெல்லியூரிலும் அருள் புரிந்து ஸ்ரீதுர்க்காதேவியாக அவதரித்து, மாயை இருளகற்றி மக்களை மகிழ்வுறச் செய்கின்றாள். தீர்க்க முடியாத திகிலையும், துன்பத்தையும்தேவியேதீர்த்தருளினாள்என்பதுவருமாறு. முற்காலத்தில் மகிஷன் என்னும் அரக்கன் ஒருவன் எல்லோருக்கும் துன்பம் செய்த காலத்தில் எல்லாத் தெய்வாம்சங்களிலிருந்தும் சக்தி வெளிப்பட்டு ஒருருவாகத்திரண்டு மகாசக்தி உருவாயிற்று, அம்மகாசக்தி பலவிதமான ஆயுதங்களைத் தரித்துச் சென்று ஆற்றல் மிகுந்த மகிஷனை மர்த்தனஞ் செய்து உலகம் அனைத்துக்கும் மங்களம் அருளினாள். ஆதலால் நாமும் அவளை வழுத்தி உய்தி பெறுவோமாக.

### மது ஒழிப்பு----

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

சேசரம் மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைத்தார்.

பிரதம விருந்தினர் திரு. நா. குகராசா (பொருளாளர், வடகிழக்கு மாகாண பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு) தமதுரையில் பொறாட் நிறுவனம் இப்பகுதியில் செய்யும் சேவைகளை விவரித்தும் பாராட்டியும் மக்கள் [illegible] னார். (ஒ)

## சமய சந்நிதிகளில்

### ஆதி வைரவர் வீதியுலா

யாழ்ப்பாணம் ஆக. 28

யாழ். நாயன்மார் கட்டு ஸ்ரீ ஆதிவைரவர் ஆலயத்தில் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. பின்பு அலங்காரமான ஆதி வைரவமூர்த்தி வீதியுலாவும் இடம் பெற்றது.

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம். ஆக 28

உரும்பராய் காட்டு வைரவர் ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் பெருமானுக்குச் சங்காபிஷேகம் நடைபெறும்.

நண்பகல் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) அடுத்துப் பெருமான் வீதி வலம் வரும் காட்சியும் இடம் பெறும்

### விநாயக சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம் ஆக. 28

வண்ணை – சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை விநாயக சதுர்த்தி உற்சவம் நடைபெறும்.

காலை 10 மணியளவில் ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு அஷ்டோத்தர சங்காபிஷேகம் நடை பெறும். அதைத் தொடர்ந்து ஆராதனை, திருமுறைப் பஜனை என்பன நிகழும்.

மாலை 6-30 மணியளவில் ஸ்ரீ விநாயகர் உள் வீதி வலம் வரும் காட்சி இடம் பெறும்.

விசேஷ நிவேதனமாக 1008 மோதகம் பெருமானுக்குப் படைக்கப் படும்.

(இ - 90)

### காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில்

காரைநகர் ஆக 28

எதிர் வரும் 30ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணியில் இருந்து ஆதி மூர்த்தியாகிய ஆண்டிகேணி ஐயனாருக்குச் சங்காபிஷேகமும், சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மக்களின் எதிர்காலப் பாதுகாப்பை முன்னிட்டு நடைபெறும். நண்பகலில் அன்னதானம் வழங்கவும் பொதுமக்கள் பலர் சேர்ந்து ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

(இ)

### சித்தன்கேணியில்

சித்தன்கேணி அருள் மிகு ஸ்ரீமகா கணபதிப் பிள்ளையார் கோயில் சதுர்த்தி உற்சவம் இன்று வெகு சிறப்பாக நடைபெறும்.

இரவு 7 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதமசீடன் வண்ணை, நீராவியடி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா ஆசிரியர் 'பிள்ளையார் பெருமை' பற்றிச் சங்கீத கதாப்பிரசங்கம் செய்வார்.

### சுழிபுரத்தில் சங்காபிஷேக விழா

சுழிபுரம், ஆக. 28

சுழிபுரம்-கம்பனை ஸ்ரீ ராஜராஜேஸ்வரிஅம்மன் ஆலய சங்காபிஷேக விழா இன்று வெள்ளி காலை 9-00 மணிக்கு இடம்பெறும்.

இதைத் தொடர்ந்து அம்பாளுக்கு விசேஷ பூசையும், குளிர்த்தியும் நடைபெற்று பிறபகல் 5 மணியளவில் விசேஷ புஷ்ப விமானத்தில் அம்பாள் அடியார்களுக்கு அருள் பாலிக்கத் திரு வீதி உலா வருவார். (இ)

### இன்று யாழ் வருகிறார்கள்

யாழ்ப்பாணம், ஆக. 28

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்புச் செயலாளர் திரு. எஸ், சுதசிங்கா, அரசியல்குழு உறுப்பினரும் உலக மாக்ஸிஸ்ட் [றிவியூ] சஞ்சிகையின் இலங்கைப்பிரதிநிதியுமான திரு ருஜா கொலூரே மத்திய சமிட்டி அங்கத்தவரும் சக்தி பத்திரிகை ஆசிரியருமான திரு சுசந்தன் கந்தசாமி ஆகியோர் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை இவர்கள் பார்வையிடுவர். [இ]

## கூட்டணி சார்பில் இருவருக்கு இடம்

கொழும்பு, ஆக. 28

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்படும் இடைக்கால நிர்வாகத்தில் இரண்டு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள்இடம் பெறுவர் என்று தெரிகின்றது.

திரு. இரா. சம்பந்தன், திரு. பி. எஸ். சூசைதாஸன் ஆகியோரே அவர்கள் என்று சொல்லப்படுகின்றது.

(ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உதயன்

28 - 08 - 1987 வெள்ளிக்கிழமை






# HORIZON ENTERPRISES

## பிரயாண ஒழுங்குகள்

## A. பத்மதாஸ்

குவைத் நாட்டிற்கு குறுகிய நாட்களுள் அனுப்பி வைக்கக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பம். நாம் மேற் கொள்ளும் அனைத்து நாடுகளுக்கான வேலை வாய்ப்பும் உதவி முகவர் நிலையமின்றி நேரிலேயே அனுப்பும்[Main]தலைமை முகவர் நிலையம் என்பதை மறந்து விடாதீர்கள். எனவே சந்தேகத்தைத் தவிர்த்து எவ்வித அச்சமுமின்றி விரையுங்கள்.




## KUWAIT
## குவைத்
## KUWAIT

| | | | |
|---|---|---|---|
| 1) | கூலியாட்கள் | — | LABOURER |
| 2) | மேசன் | — | MASON |
| 3) | தச்சுவேலை | — | CARPENTER |
| 4) | துப்புரவாளர் | — | CLEANERS |
| 5) | இலெக்ரீசியன் | — | ELECTRICIANS |
| 6) | மேற்பார்வையாளர் | — | SUPERVISOR |
| 7) | வீட்டு சாரதி | — | HOUSE DRIVER |
| 8) | கனரக வாகன சாரதி | — | H. V. DRIVER |
| 9) | வின்ச் ஒப்பரேட்டர் | — | WINCH OPERATOR |
| 10) | கனரக உபகரண மெக்கானிக் | — | HEAVY EQUIPMENT MECHANIC |
| 11) | கனரக உபகரண இலெக்ரீசன் | — | HEAVY EQUIPMENT ELECTRICIANS |
| 12) | தையல்காரர் | — | TAILORS |
| 13) | வீட்டு பணிப் பெண்கள் | — | HOUSE MAIDS |
| 14) | ஆஸ்பத்திரி தாதிகள் | — | NURSES |
| 15) | ஸ்ரோர் கீப்பர் | — | STORE KEEPER |
| 16) | செக்கியூரிட்டி | — | SECURITY GUARD |

★ உணவு, இருப்பிடவசதி இலவசம். பாஸ்போட், 16 புகைப்படங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். முற்பணம் அறவிடப்பட மாட்டாது.

### சாரதி அனுமதிப் பத்திரம்

வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கும், வாகனம் செலுத்தத் தெரியாதவர்களுக்கும் வாகனம் செலுத்தப் பழக்கியும் 3 நாட்களில் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும். எமது முகவர் நிலயத்தினூல் வெளிநாடு செல்பவர்களுக்கு மட்டுமே இச் சலுகை வழங்கப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு மட்டுமே வேலை வாய்ப்புடன் பிரயாண ஒழுங்குகள் செய்யும் பிரதான முகவர் நிலையம்.

பிரதி வாரமும் பிரயாணம் செய்தவர்களின் பெயர் விவரங்களை வெளியிடும் ஒரேயொரு பிரயாண முகவர் நிலையம்.

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை எமது அலுவலகம் திறந்திருக்கும். கடித மூலம் விபரம் பெற விரும்புவோர், சுய விலாசம் இட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ளவும்.

## A. பத்மதாஸ்

97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்


ஷப்ரு ஆதரவில்

## காவலூரில் யயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஆக. 28

தீவுப்பகுதி கூடைப்பந்தாட்ட வீரர்களின் நன்மை கருதி ஷப்ரு யுனிக்கோ பிஞன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆதரவில் நாளை காவலூரில் ஒருநாள்கூடைப்பந்தாட்டப் பயிற்சி முகாம்நடைபெறும்.

தேசியக் கூடைப்பந்தாட்ட பயிற்சியாளர் சங்கத் தலைவர் திரு இராம் சுந்தரலிங்கம் இந்த பயிற்சி முகாமை நடத்துவார்.

நாளை காலை 9-00மணி முதல் ஊர்காவற்றுறை சென். அந்தனீஸ் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இந்தப் பயிற்சி முகாம் நடைபெறும்.

பயிற்சி முகாமில் கலந்து கொண்டோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். (உ)

## கூடைப் பந்தாட்டம்; கண்காட்சிப் போட்டி

### பல்கலைக்கழக களத்தில்இன்று

யாழ்ப்பாணம், ஆக. 28

தேசிய கூடைப்பந்தாட்ட பயிற்சியாளர் சங்கம் யாழ்ப்பாணவீரர்களுக்காக நடத்தும் கூடைப்பந்தாட்டப் பயிற்சி முடிவின் இறுதி நாளான இன்று விசேட கண்காட்சி கூடைப்பந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெற ஏற்பாடாகியிருக்கின்றது.

ஷப்ரு யுனிக்கோ பிஞன்ஸ் நிறுவனத்தின் ஆதரவில், யாழ்பல்கலைக்கழக விளையாடு களத்தில் இந்தப்பயிற்சிமுகாம் நடத்தப்பட்டு வருகின்றது.

பயிற்சியாளர்களுக்கிடையிலான இருதெரிவு அணிகள் இன்றைய மோதலில் கலந்துகொள்ளுகின்றன.

இன்று மாலை 4-30 மணிக்கு இப்போட்டி ஆரம்பமாகும்.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக ஷப்ரு யுனிக்கோ பிஞன்ஸ் லிமிடெட்டின் பொது முகாமையாளர் திரு வி. ஸ்ரீரங்கநாதன் கலந்து கொள்வார்.

பயிற்சிமுகாமில்கலந்து கொண்டோருக்கான சான்றிதழ்களை அவர் வழங்குவார். (உ)

ஞாயிறு பற்றிக்ஸ் மைதானத்தில்

## ஷப்ரு-உதயன் குழுவுடன் வங்கிகள் அணி மோதல்

யாழ்ப்பாணம், ஆக.28

ஷப்ரு யுனிக்கோ பிஞன்ஸ் லிமிடெட். உதயன் சஞ்சீவி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு அணிக்கும்—

இலங்கை வர்த்தக வங்கி, ஹற்றன் நாஷனல்வங்கி ஆகியவற்றின் யாழ்ப்பாணக் கிளைகளின் கூட்டு அணிக்கும் இடையிலான சினேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஞாயிறு காலை 9 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகும். (உ)

### ஜயேந்திர- - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யேறினூலும் தொடர்ந்து துறவு நிலையைக் கடைப்பிடிப்பேன்.

''இளைய சங்கராச்சாரியாரை மடாதிபதியாக்க தேவையான அலுவல்களைச் செய்துவிட்டேநான் மடத்தை விட்டு வெளியேறினேன்'' — இப்படி ஸ்வாமிகள் தெரிவித்தார். (உ-எ)

### மன்னூர்ப்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன.

இக்கோழைத்தனமான செயலினூல் எமது இயக்க உறுப்பினர்களானகில்மன்(அடம்பன்) அர்ச்சுன (கல்லியட்டங்காடு) ரஞ்சன் (பிச்சைக்காரன்குளம்) ஆகியோர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை எமது முகாம் ஒன்றும் சமூக விரோத சக்திகளால் சுற்றி வளைக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

இந்திய அமைதி காக்கும் படையினருக்கு இவை குறித்து உடன் தகவல் கொடுத்தும் அவர்கள் அங்கு வரவில்லை.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (இ-ஏ)

### திருமலை---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யப்படவேண்டும் என்று கோரி சுமார் ஆயிரம் ஆண்களும், பெண்களும், இளைஞர்களும் இந்த உண்ணுவிரதத்தில் கலந்துகொண்டனர்.

திரு. பூரி உண்ணுவிரதக்காரர்கள் மத்தியில் வந்தபோது அவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர். ''எனது மகனை விடுவித்துத் தாருங்கள்', ''எனது கணவனை விடுவித்துத் தாருங்கள்'', ''எனது அண்ணன், தம்பிமாரை விடுவித்துத் தாருங்கள்'' என்ப பலரும் அழுது புலம்பிக் கூறினர்.

அடுத்த இரண்டு நாட்களில் 300 பேர் விடுவிக்கப்பட உள்ளனர் என்று திரு. பூரி உறுதி அளித்தும் உண்ணுவிரதக்காரர்கள் கேட்காது திரு. பூரியின் வாகனத்துக்கு முன்னுல் அமர்ந்து மறியல் செய்தனர்.

விடுதலைக்கு ஒரு குறிப்பிட்ட திகதியைச் சொல்லுங்கள் என்று உண்ணுவிரதிகள் கோஷமிட்டனர். 30ஆம் திகதிக்குள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று திரு. பூரி உறுதி அளித்த பின்பே அவரது வாகனத்தை அங்கிருந்து நகர உண்ணுவிரதிகள் அனுமதித்தனர். (இ-150)

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 28

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுக்கூட்டம் ஒன்று இன்று மாலை 4.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்தும், தமிழீழப் போராட்டத்தை ஆதரித்துமே இக்கூட்டம் நடைபெறுகின்றது. (உ-ஒ)

### துரோக---

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

குதலில் ஈடுபட்டு நாம் எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வந்திருக்கிறேம்.

இன்னல்கள் மத்தியிலும் இன்றும் கொடிய சயனைட்டை மாலையாக கழுத்தில் போட்டுள்ளோம்.

ஆனுல் இன்று சில துரோகச் சக்திகளால் எமது உறுப்பினர்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டு வருகிறுர்கள்.

இத் துரோகசக்திகளை தமிழீழமக்கள் இனம் கண்டுகொள்ளுமாறு நாம் கேட்டுக்கொள்ளுகிறேம்.—என்றுர் [அ-10[

### ஷெல்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் கழற்றிப் பார்த்ததாகவும்—

அது கழற்றப்பட முடியாது இருந்ததால்அதனை எறிந்து அவர்கள் கழற்ற முயற்சித்ததாகவும்கூறப்படுகின்றது.

இந்த ஷெல் வாழைப் பொத்தி வடிவத்தில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஷெல் வெடித்த சத்தத்தைக் கேட்டு கட்டுடேன் கிழக்குப் பகுதி மக்ள் அதிர்ச்சி அடைந்தனர். (உ-119)

### இந்திய இராணுவ---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துத் தெரிவிகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இந்திய இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தை அடுத்து நடைபெற்ற விசாரணைகளை அடுத்தே இந்திய அமைதிப்படையினரின் ரோந்து நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மடத்தடிச் சந்தியில் மரத்தில் ஏற்றப்பட்டிருந்த புலிக்கொடி கடந்த 25 ஆம் திகதி (செவ்வாய்) காலையில் பொலீஸாரால் அகற்றப்பட்டது. அன்றைய தினம் காலையில் பிரதான வீதியிலுள்ள தமிழர்களின் வீடுகளில் எல்லாம் உடனடியாக புலிக்கொடிகள் ஏற்றப்பட்டன.

**கிரனேட் வீச்சு**

கடந்த திங்கள் ஊரடங்கு நேரத்தில் பிரதான வீதி — கடல்முக வீதி சந்தியிலுள்ள தமிழர் ஒருவரின் வீட்டிற்கு கிரனேட் ஒன்று வீசப்பட்டது. இதனுல் அந்த வீட்டுப் பெண்மணியும், ஒரு சிறு குழந்தையும் சிறு காயத்துக்கு உள்ளாகினர். வங்கி ஒன்றில் கடமைபுரியும் ஓர் ஊழியரின் வீட்டிற்கே கிரனேட் வீசப்பட்டது.

இந்திய இராணுவ ரோந்து நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து மடத்தடிச்சந்தி மக்கள் இரவு வேளைகளில் வேறு இடங்களில் உள்ள வீடுகளுக்குச் சென்று தங்குகின்றனர்.

அனுராதபுரச் சந்தியிலும் இவ்விதமான பதற்ற நிலை நிலவுகிறது. கடந்த திங்கள் மாலையில் அங்கு வைத்து தமிழ் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டாராம். (அ-150)

### பிரிட்டிஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துக்கு ஒரு நாள் விஜயம் மேற்கொள்ளுகிறுர்.

காலை 9மணி அளவில் யாழ் கோட்டையில் வந்திறங்கும் இவர் யாழ் நகர் மற்றும் வடமராட்சி அழிவுகளை நேரில் பார்வையிடுவர்.

யாழ் செயலக உயர் அதிகாரிகளையும் அவர் சந்திப்பார்.

இன்று பிற்பகல் 4 மணிக்கு அவர்கொழும்பு திரும்ப ஏற்பாடாகி உள்ளது. (இ-7)

## வடபகுதி மீனவருக்கு மீண்டும் கடன் வசதி

யாழ்ப்பாணம், ஆக. 28

நிறுத்தப்பட்டிருந்த வடபகுதி மீனவர்களுக்கான கடன் வசதிகள் மீண்டும் வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.

இது சம்பந்தமாக இன்று கடற்றெழில் அமைச்சில் நடைபெறும் கூட்டம் ஒன்றில் இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கடற்றெழில் அமைச்சுக்கு சிபார்சு செய்யப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் வை. மு. பஞ்சலிங்கம் தெரிவித்தார். (உ-7)

### அதிகாரங்கள்..

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

தெரிவித்தன.

இதனிடையில் இலங்கை – இந்திய அரசு அதிகாரிகளுக்கு இடையேயான இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் திங்கட்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ளன.

கொழும்புப் பேச்சுக்களின் தொடர்ச்சியாகவே புதுடில்லிப் பேச்சுக்கள் அமையும்.

புதுடில்லிப் பேச்சுக்களின்போது இலங்கை அரசுக்குழுவுக்கு வெளியுறவுச் செயலாளர் டபிள்யு ரி. ஜெயசிங்க தலைமை வகிப்பார்.

இந்தியக் குழுவுக்கு கொழும்பில் உள்ள இந்திய தூதர் டிக்ஸிற் தலைமை வகிப்பார்.

கடந்தஆண்டுகொழும்பில் இடம்பெற்ற இலங்கை அரசு – கூட்டணிப் பேச்சுக்களின் போது தீர்வு காணப்படாத விஷயங்கள் குறித்தே கடந்த வாரம் கொழும்புப் பேச்சுக்களின்போது அக்கறை காட்டப்பட்டது.

மூன்றும் கட்டமான இறுதிப்பேச்சுக்கள் மீண்டும் கொழும்பில் நடைபெறும் என்று அரசவட்டாரங்களில் தெரிவிக்கப் பட்டது. (இ-எ)

### உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 28

தொல்புரம் மத்தி கொட்டடிப்பகுதி அருள் மிகு ஆதிமுத்து மாரியம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தை அடுத்து சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

★ ★ ★

இன்று கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி அருள்மிகு சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி உற்சவம் ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ க. மு. ஜெகநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

### ஊரெழுவில்

யாழ்ப்பாணம், ஆக. 28

ஊரெழு ஸ்ரீ மீனுட்சியம்மன் கோவில்மகோற்சவ இலக்கிய விழாவில் இன்று கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ''தெய்வக்கற்பினள்'' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

### ஆயுதங்கள்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கே. ரணவீரவிடம் இவற்றைக் கையளித்தார்.

இதேவேளை மன்னூரில் புளொட் இயக்கத்தினர் நேற்று ஆயுதங்களை ஒப்படைத்தனர் என்று அரசாங்க வானெலி அறிவித்தது. (உ-7-10)

### ஈ.என்-டி-எல்எவ்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஈ. என் டி. எல். எவ்விற்குத்தலைமைவகித்து வழிகாட்டுவதற்கு முழு அதிகாரமுடைய உயர் ஆணைக்குழு அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆணைக் குழுவில் பொதுச் செயலாளராக டக்ளஸ் தேவானந்தாவும், துணைச்செயலாளராக ஈஸ்வரனும் ஏனைய உறுப்பினர்களாக ரமேஷ், அசோக். செல்வம் ஆகியோரும் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டதாகஅந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. – (அ-உ)

## நீத்தார் பட்டியல்

### சாமுவேல் கந்தவனம் திரவியநாயகம்

சாவகச்சேரி பிரபல சட்டத்தரணியும், முன்னுள் நகரசபைத் தலைவரும், சமாதான நீதிபதியுமான திரு. எஸ். கே. திரவியநாயகம் அவர்கள் கர்த்தருக்குள் மறுமைப் பிரவேசம் அடைந்துள்ளார். அன்னூர் காலஞ்சென்ற ஃபெள் செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், திருமதி எடிற் திரவியமலர் இரத்தினராசா [ஆசிரியை. மகளிர் மகாவித்தியாலயம்,சாவகச்சேரி] அவர்களின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற ஏ டீ. ஆர். இரத்தினராசா அவர்களின் மாமனூரும் விஜிற் ஏகன் (அமெரிக்கா), யூகன் இரத்தினராசா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னூரின் பிரேதசேம ஆராதனை அவரது இல்லத்தில் 29-08-87 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும்.

திருமதி ஏ. சி. இரந்தினராசா
'திரவியவாசா'
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டுத் திகதி: 28-08-1987 Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Friday August 28, 1987.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org